**O.S.No.03/2020**

வா.சா.2, திரு.தங்கச்சாமி, த.பெ.சுப்பிரமணியன்
நாள் : 07.11.2023 நேரம் : 12.30 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) தாவா சொத்து விக்கிரமபாண்டியபுரம் கிராமத்தில் உள்ளது. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அழைப்பாணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். வாதி எனது பங்காளி ஆவார். வாதி எத்தனை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒரு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2) தாவா சொத்தின் சர்வே எண்.378/5 ஆகும். நான் மேற்படி சொத்திற்கு தெற்கு பகுதியில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நான் வீடு கட்டி குடியிருந்து வரும் சொத்தின் சர்வே எண்.378/9 ஆகும். எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து பொதுப்பாதை என்று தெரிந்துகொண்டேன் என்றால் சர்வே புலப்படத்தை பார்த்து தெரிந்துகொண்டேன், முன்னோர் காலத்திலிருந்து பயன்படுத்தி வருகிறார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 ஆவணம் தான் நான் குறிப்பிடும் புலப்படம் என்று சொன்னால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தில் பொதுப்பாதை என எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எந்த ஆவணத்திலும் தாவா சொத்து பொதுப்பாதையாக குறிப்பிடப்படவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பதுபோல் பொதுப்பாதை என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்தில் தற்போது வீடு உள்ளது என்றால் இல்லை, கல், விறகு, மணல் தான் உள்ளது. சர்வே எண்.378/5 ல் பிரதிவாதி வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நானும், வாதியும் தாவா சொத்தை பாதையாக

பயன்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது சொத்திற்கு செல்வதற்கு வேறுபாதை உள்ளதா என்றால் இல்லை. எங்களது சொத்திற்கு நாங்கள் செல்ல வேண்டும் என்றால் 377/12 வழியாக தற்போது வரை சென்று வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

5) நாங்கள் தற்போது இன்னொருவரின் இடத்தின் வழியாக சென்றுகொண்டிருக்கிறோம். எனது வீட்டை சுற்றி வீடுகள் உள்ளதால் தாவா 2ம் இலக்க சொத்து மற்றும் வேறுபாதை வழியாகத்தான் நானும், வாதியும் சென்று வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் பூர்வீக பாத்தியமானது என்றும், அதனை சுற்றி உள்ள இடங்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியமானது என்றும், 1ம் இலக்க சொத்திற்கு பட்டா தாக்கல் இல்லாமல் காலிமனை என்று குறிப்பிடப்பட்டதை அறிந்து மேற்படி சொத்தை அபகரிக்க வாதி வழக்காடி வருகிறார் என்றும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) தாவா 1ம் இலக்க சொத்திற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் பட்டா பெறுவதற்கு மனு செய்து முயற்சி எடுத்து வருகிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி, 1ம் இலக்க சொத்திற்கு வாதிகளுக்கு எந்தவகையிலும் தொடர்பும், பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாத்தியமில்லாத சொத்திற்கு வாதி விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வீடு உள்ளதை மறைத்து பொய் வழக்காடி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்று சொன்னால் சரிதான். ஊர்பொதுமக்கள் 1வது இலக்க தாவா சொத்து வழியாகத்தான் சென்று வருவார்கள் என்று சொன்னால் சரிதான். வேறுஎதுவும் வழிகிடையாது என்று சொன்னால் சரிதான்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.55 PM